# தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் லிட்., இராமநாதபுரம்

அலுவலக முகவரி : மாவட்ட மேலாளர், டாஸ்மாக் லிட்., பெருந்திட்ட வளாகம், இராமநாதபுரம். அஞ்சல் - 623 503
தொலைபேசி எண் : 04567 - 232550

ந.க.எண்.அ3/348/2020

நாள்: .09.2020

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
## (Tender Notice)

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) சார்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வரும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் **அக்டோபர்'2020** முதல் **செப்டம்பர்'2021** வரை சேகரமாகும் காலி அட்டைப் பெட்டிகள் பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகிறது.

விவரங்களுடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இராமநாதபுரம் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் **07.09.2020** காலை 10.00 மணி முதல் **24.09.2020** பிற்பகல் 05.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி ஆவணம் ஒன்றுக்கு ரூ.525/- (ரூபாய் ஐநூற்றி இருபத்தி ஐந்து மட்டும் - சரக்கு மற்றும் சேவை வரி (GST) உட்பட) மாவட்ட மேலாளர், டாஸ்மாக், இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயரில் இராமநாதபுரத்தில் காசாக்கக்கூடிய தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலை மூலமாக நேரில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பிணைத் தொகையாக ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)-க்கான வங்கி வரைவோலையையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. மேலும் சரியாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் தள்ளுபடி செய்யப்படும்.

**25.09.2020** அன்று மாலை 01.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி விண்ணப்படிவம் பெறப்படும். நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அஞ்சலக காலதாமதம் உட்பட பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் இராமநாதபுரம் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அவர்களால் அவரது அலுவலகத்தில் **25.09.2020** அன்று மாலை 03.00 மணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக எந்த ஒரு முடிவையும் எடுப்பதற்கு மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரர் மட்டுமே ஒப்பந்தபுள்ளி திறக்கும் இடத்தில் ஆஜராக அனுமதி உண்டு, உடன் வேறு நபர்கள் வர அனுமதிக்கப்படமாட்டாது. தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் விண்ணப்பதாரர் வரமுடியாத நிலையில் தனது சார்பாக ஒப்பந்தபுள்ளி திறக்கும் நேரத்தில் வேறு ஒரு நபரை முறையான அனுமதி கடிதம் கொடுத்து ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளச் செய்யலாம். விண்ணப்பதாரரின் முறையான அனுமதிக்கடிதம் இல்லாமல் வரும் நபரை ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்க இயலாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாளில் இருந்து மூன்று தினங்களுக்குள் காப்புத் தொகை செலுத்தவேண்டும். இரண்டு மாத காப்புத் தொகை ஒப்பந்த காலம் முடிந்த பின்னர் ஒப்பந்த விதிகளின்படி திருப்பி அளிக்கப்படும். இடையில் எக்காரணத்தை முன்னிட்டும் இத்தொகை சரிகட்டப்படமாட்டாது.

ஒப்பந்தகாரர்கள் கீழ்கண்ட வட்டங்கள் அடங்கிய நான்கு பகுதிகளுக்கும் தனித்தனியே விலைப்புள்ளிகள் அளிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மற்றும் கீழக்கரை வட்டங்கள் | 43 கடைகள் |
| 2. | பரமக்குடி வட்டம் | 28 கடைகள் |
| 3. | இராமேஸ்வரம் மற்றும் திருவாடனை வட்டங்கள் | 25 கடைகள் |
| 4. | கமுதி, கடலாடி, மற்றும் முதுகுளத்தூர் வட்டங்கள் | 27 கடைகள் |

மேற்குறிப்பிட்ட கடைகளில் சேகரமாகும் காலி அட்டைப் பெட்டிகள் உத்தேச அளவு மற்றும் இதர விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை அலுவலகத்தில் வேலை நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மாவட்ட மேலாளர்
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
இராமநாதபுரம்

# ஒப்பந்த நிபந்தனைகள்

1. மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அவற்றுடன் இயங்கும் மதுக்கூடங்களில் சேகரம் செய்யப்படும் காலி அட்டைப்பெட்டிகள் குறிப்பிடும் தொகையை பிரதி மாதம் மாவட்ட மேலாளர் குறிப்பிடும் தினங்களுக்குள் முன்பணமாக வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். இத்துடன் மாவட்ட மேலாளர் அவர்கள் குறிப்பிடும், இரண்டு மாதங்களுக்குரிய காலி அட்டைப்பெட்டிகள் தொகையை முன்பணமாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், இராமநாதபுரம் என்ற பெயரில் வரைவோலை எடுத்து செலுத்த வேண்டும்.

2. கடைகளில் பெறப்படும் காலி அட்டைப்பெட்டிகள் குறித்து கடை மேற்பார்வையாளரால் பேணப்படும் பதிவேட்டில் ஒப்புதல் செய்வதுடன், காலி அட்டைப்பெட்டிகள் பெற்றது குறித்து மூன்று பிரதிகளில் ஒப்புதல் பெற்று ஒரு நகல் கடை மேற்பார்வையாளரும் ஒரு நகல் ஒப்பந்தகாரரும் வைத்துக் கொள்ள வேண்டும். அதன் மற்றொரு நகலை மாவட்ட மேலாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

3. காலி அட்டைப்பெட்டிகள் எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து, ஏற்ற, இறக்க, தொழிலாளர்களை நியமித்தல், அவர்களுக்கான ஊதியம் வழங்குவதல், மற்றும் மேற்படி போக்குவரத்திற்கான காப்பீடு செய்தல், போர்கவரத்து செலவு ஆகியவை ஒப்பந்தகாரரின் பொறுப்பாகும்.

4. தொடர்ந்து 7 நாட்களுக்கு காலி அட்டைப்பெட்டிகள் எடுத்துக்கொள்ளாத பட்சத்தில் ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மேலும், காப்புத் தொகை டாஸ்மாக் நிறுவன கணக்கில் வரவு வைக்கபடும். காப்புத் தொகை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்காக சரிகட்டப்படமாட்டாது. ஒப்பந்த காலம் முடிவுற்ற பின்னரே திரும்ப வழங்கப்படும்.

5. மதுபானக் கடையிலிந்து மதுபான காலி அட்டைப்பெட்டிகள் தவிர வேறு எந்த பொருட்களையும் எடுத்துச் செல்ல இந்த ஒப்பந்தம் பொருந்தாது.

6. மதுபான சில்லறை விற்பனை கடையின் உள்ளேயோ, மதுக்கூடத்தின் உள்ளேயோ, வேறு எந்த விதமான பொருள்களையும் எடுத்துச் செல்ல அனுமதி இல்லை.

7. மதுக்கடையின் மேற்பார்வையாளர் / மதுக்கூட மேற்பார்வையாளர் அல்லது விற்பனையாளர் / உதவி விற்பனையாளர் ஆகியோரிடம் தனிப்பட்ட முறையில் காலி அட்டைப்பெட்டிகள் வாங்குவது ஒப்பந்த முறிவுக்கு வழி வகுப்பதோடு காப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

8. காலி அட்டைப்பெட்டிகள் சேர்த்து இதர டாஸ்மாக் உடைமைகளை எடுத்துச் செல்லும் பட்சத்தில், டாஸ்மாக் பொருட்களை களவாட முயன்றதாகக் கருதி, பத்தி 7-ல் கூறப்பட்ட நடவடிக்கையுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

9. உள் குத்தகைதாரர்களை ஒப்பந்தம் செய்வது அனுமதிக்கப்படமாட்டாது.

10. காலி அட்டைப்பெட்டிகள் சேகரிக்க நியமிக்கப்படும் நபர்களுக்கு மாவட்ட மேலாளரால் அடையாள அட்டை அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் பிரதி மாதம் வழங்கப்படும். அடையாள அட்டை அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட கடிதம் இல்லாத நபர்கள் காலி அட்டைப்பெட்டிகள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

11. ஒப்பந்தகாரர்கள் டாஸ்மாக் நிறுவனத்திற்கான மற்றும் மதுவிலக்கு ஆய தீர்வை துறைக்கோ செலுத்த வேண்டிய தொகையை நிலுவையில் வைத்திருக்க கூடாது. உண்மையை மறைத்து காலி அட்டைப்பெட்டிகள் மற்றும் கிழிந்த அட்டைப்பெட்டிகள் பெறுவதற்கான ஒப்பந்தகாராக தேர்வு செய்யப்பட்டிருப்பது பின்னர் தெரிய வந்தால் அவர்களது காப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு ஒப்பந்தமும் உடனடியாக ரத்து செய்யப்படும்.

12. மதுக்கடைகளில் திண்பண்டம் விற்பனை செய்ய டாஸ்மாக் நிறுவனத்தால் நியமிககப்பட்ட ஒப்பந்தகாரர் உண்மையை மறைத்து காலி அட்டைப்பெட்டிகள், கிழிந்த அட்டைபெட்டிகள் பெறுவதற்கான தேர்வு செய்யப்பட்டிருப்பது பின்னர் தெரிய வந்தால் அவர்களது காப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டு ஒப்பந்தமும் உடனடியாக ரத்து செய்யப்படும்.

13. காலி அட்டைப்பெட்டிகள் வரிகளையும் சேர்த்து செலுத்திட வேண்டும்.

14. ஒப்பந்தகாரர்கள் டாஸ்மாக் பணியாளர்களிடமோ, மதுபானக் கடை உழியர்களுடன் கூட்டு சேர்ந்து டாஸ்மாக் நிறுவனத்திற்கு பணம் மற்றும் பொருள் இழப்பு ஏற்பட காரணமாக இருந்தால் அவர்கள் செலுததிய காப்பீடு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

15. ஒப்பந்தப்புள்ளி செயல்பாட்டில் அதிருப்தி நிலை கண்டறியப்பட்டால் மாவட்ட மேலாளருக்கு ஒப்பந்தாரது உரிமத்தினை ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டும்.

16. ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் காலி அட்டைப்பெட்டிகள் எடுப்பதற்கு விண்ணப்பதாரர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

17. ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் காலி அட்டைபெட்டிகள் எடுப்பதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வட்டத்திற்கும் தனித்தனியான படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு காப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும்.

18. மதுபான காலி அட்டைப்பெட்டிகள் டெண்டர் எடுப்பதில் மாவட்ட மேலாளர் முடிவே இறுதியானது.

19. விண்ணப்பதாரர்கள் தங்களது Passport Size புகைப்படம் ஒன்றினை விண்ணப்பத்தில் ஒட்டியும் மற்றொன்றை இணைத்தும் அனுப்ப வேண்டும்.

20. விண்ணப்பதாரர்கள் தங்களது அட்டையை காண்பிக்கும் வண்ணம் ரேசன் கார்டு/வாக்காளர் அடையாள அட்டை நகல் இணைத்து அனுப்ப வேண்டும்.

ஒப்பந்ததாரர்

மாவட்ட மேலாளர்
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
இராமநாதபுரம்